| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 29.12.2025 | |
| CC.No. 100/2025 | |
| சாட்சி : PW3 | |
| பெயர் : திரு. தவசி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பொன்னுச்சாமி | தொழில் : கொத்தனார் |
| கிராமம் : அம்மாபட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 35/2025 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் இல்லை. ) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா. ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 06.01.2021 அன்று சுந்தரப்பாண்டியன் எனது தங்கை நாகவல்லியை தவறாக பேசி பிரச்சனை செய்து எனது அப்பாவை உதைத்து கீழே தள்ளிவிட்டார். அதனால் ஏற்பட்ட மனஉளைச்சலில் எனது அப்பா மருந்து குடித்துவிட்டார். அதனால் அவரை மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து பின்னர் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். பின்னர் 09.01.2021 ம் தேதி சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்துவிட்டார். 10.01.2021 அன்று எனது அப்பாவிடம் எதற்காக மருந்து சாப்பீட்டீர்கள் என்று நான் கேட்டதற்கு எனது அப்பா நடந்ததை சொன்னார். அதனால் நானும், எனது தாய்மாமன் கருப்பையாவும் சுந்தரப்பாண்டியனிடம் கேட்ட போது சுந்தரப்பாண்டியனுக்கும், எங்களுக்கும் வாக்குவாதம் நடந்தது. நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். 11.01.2021 ம் தேதி விடியற்காலை 03.00 மணியளிவல் எதிரிகளும் மூன்று சேர்ந்து எங்கள் வீட்டிற்கு வந்து பொட்டைபையளே, தேவடியா பையளே என்று ஆபாசமாக பேசினார்கள். எதிரிகளான காமேஷ்குமார், லோகநாதன் ஆகியோர்கள் என்னை உருட்டுகட்டையால் முதுகிலும், வலது தோள்பட்டையிலும் அடித்த நடுரோட்டில் தூக்கிபோட்டுவிட்டார்கள். பின்னர் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மனபயத்தை ஏற்படுத்தினார்கள். எனது அப்பாவையும் உருட்டு

கட்டையால் எதிரிகள் காமேஷ்குமார், லோகநாதன் சேர்ந்து தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். அதில் எனது அப்பாவுக்கு பின் தலையிலும், நெற்றியிலும் காயம் ஏற்பட்டது. அதனால் நாங்கள் மணப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.